**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான 31 மறுவாழ்வு இல்லங்கள் – 2016–17 ஆம் நிதியாண்டு– திட்டத் தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குதல்– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.20

நாள்: 08–03–2017
துன்முகி, மாசி 24,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.23, மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை, நாள் 04–06–2010.
2. அரசாணை(நிலை) எண்.83, மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை, நாள் 10–12–2014.
3. அரசாணை(நிலை) எண்.44, மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை, நாள் 12–08–2015.
4. அரசாணை(1D) எண்.33, மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை, நாள் 19–10–2015.
5. அரசாணை(நிலை) எண்.02, மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை, நாள் 08–01–2016.
6. அரசாணை(நிலை) எண்.31, மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை, நாள் 04–03–2016.
7. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.768/மஇக 4/2016, நாள் 13.06.2016 மற்றும் 06.09.2016.

------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழகத்தில் மூன்று மாவட்டங்களுக்கு ஒரு மறுவாழ்வு இல்லம் என்ற அடிப்படையில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான 10 மறுவாழ்வு இல்லங்கள் தொடங்கிட அனுமதி அளிக்கப்பட்டு ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், திருவள்ளூர், கடலூர், திருவாரூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர் மற்றும் மதுரை ஆகிய 11 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை தவிர்த்து, மீதமுள்ள 21 மாவட்டங்களில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை 01.12.2014 முதல் புதியதாக துவக்கிட அனுமதியும் மற்றும் ஒரு

இல்லத்திற்கு 4 மாதங்களுக்கான செலவினமாக ரூ.3,51,600/– வீதம், 21 இல்லங்களுக்கு ரூ.73,83,600/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழகத்தில் முதன்முதலாக தொடங்கப்பட்ட வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான உதவும் உள்ளங்கள் மூலம் செயல்பட்டு வரும் இல்லத்தில் தற்போது 55 பயனாளிகள் தங்கி பயனடைய ஏதுவான கட்டமைப்பு வசதிகள் உள்ளதை கருத்திற் கொண்டு மற்ற அனைத்து மாவட்டங்களிலும் உள்ளது போன்று உள்ளுறைவாளர்களின் எண்ணிக்கையை 30லிருந்து 50 ஆக உயர்த்தி நிர்வாக அனுமதி மட்டும் அளித்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தொண்டு நிறுவனம் தேர்வு செய்யப்படாமையைக் கருத்தில் கொண்டு மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான 31 மறுவாழ்வு இல்லங்களை 2015–16 ஆம் நிதியாண்டில் தொடர திட்டத் தொடராணையும், 30 அரசு மனநல மறுவாழ்வு இல்லங்களுக்கும் தலா ரூ.9,14,800/– வீதம் ரூ.2,74,44,000/– மற்றும் வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் இயங்கும் உதவும் உள்ளங்கள் மனநல காப்பகத்திற்கு 30 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.7,18,800/–ம் என மொத்தம் ரூ.2,81,62,800/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் இயங்கி வரும் ''உதவும் உள்ளங்கள்'' தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலமாக செயல்படும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லத்தின் உள்ளுறைவோர்களின் எண்ணிக்கையை 30–லிருந்து 50–ஆக உயர்த்தி வழங்கப்பட்டதால் கூடுதலாக தேவைப்படும் 20 உள்ளுரைவோர்களின் உணவூட்டுச் செலவினம் மற்றும் இதர செலவினங்களுக்காக தேவைப்படும் (ஏழு மாதங்களுக்கு) ரூ.1,26,000/–ஐ நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தொண்டு நிறுவனம் தேர்வு செய்யப்பட்டதனை கருத்தில் கொண்டு மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லத்திற்கு நவம்பர் 2015 முதல் மார்ச் 2016 வரையிலான காலங்களுக்கு ஐந்து மாதங்களுக்கு ரூ.4,22,000/–ஐ நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

7. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில், 2015–16 ஆம் நிதியாண்டில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான 32 இல்லங்களுக்கு மேலே நான்காவது, ஐந்தாவது மற்றும் ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி முறையே ரூ.2,81,62,800/– ரூ.1,26,000/–, ரூ.4,22,000/– என மொத்தம் ரூ.2,87,10,800/– பெறப்பட்டது என்றும், மேற்படி தொகையில் 31 மாவட்டங்களுக்கு ரூ.2,72,33,600/– வழங்கப்பட்டது எனவும், அதில் ரூ.2,49,17,483/– செலவினம் மேற்கொள்ளப்பட்டு 31.03.2016அன்று ரூ.32,60,517/– சரண் செய்யப்பட்டுள்ளது என்றும், செலுத்துச் சீட்டின் மூலம் ரூ.5,32,800/– அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், நீலகிரி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் தமது கடிதத்தில், நீலகிரி மாவட்டத்தில் மனநல காப்பகம் சரியாக நடக்கவில்லை என்ற காரணத்தால் நீலகிரி மாவட்டத்திற்கு 2016–2017 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு தேவையில்லை என தெரிவித்து, தற்போது மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான 32 மறுவாழ்வு இல்லங்களில் 2016–2017 ஆம் நிதியாண்டில் நீலகிரி மாவட்டம் நீங்கலாக எஞ்சிய 31 மாவட்டங்களில் நடத்தப்பட்டு வரும் மனநல மறுவாழ்வு இல்லங்களுக்கு ரூ.9,14,800/– வீதம்

ரூ.2,83,58,800/—நிதி ஒதுக்கீடு மற்றும் திட்டத் தொடராணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**8.** மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் **31** மாவட்டங்களில் நடத்தப்பட்டு வரும் மன நலம் பாதிக்கப்பட்டோருக்கு மறுவாழ்வு இல்லங்களுக்கு **ரூ.9,14,800/—** வீதம் நீலகிரி மாவட்டம் நீங்கலாக **31** மாவட்டங்களுக்கு மொத்தம் **ரூ.2,83,58,800/— (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து எண்ணூறு மட்டும்) 2016—17** ஆண்டிற்கான உதவித் தொகை வழங்க இவ்வாணையில் இணைப்பில் கண்டுள்ளவாறு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

**9.** மேலே பத்தி—8ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"**2235**—சமூகப் பாதுகாப்பும் நலனும்—**02**—சமூக நலன்—**101**—மாற்றுத் திறனாளிகள் நலன் – II மாநிலத் திட்டம்—MO— மனநோயால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்வுக்கான நிதியுதவி – **09.** உதவித் தொகை —**03** குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை".

(த.தொ.கு 2235—02—101—MO—0936)

**10.** இவ்வாணை, நிதித் துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா.எண்.8684/ நிதி(சந)/2017, நாள்04.03.2017—ன்படி வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை—78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை—5/35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை—18/35
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை— 18/35 (பெயரில்)

**நகல்:—**

நிதி (சந/வ.செ.பொது—I,வ.செ.பொது—II) துறை, சென்னை—9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர்,சென்னை—9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

**இணைப்பு**

(அரசாணை(1டி) எண். 20, மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை, நாள்08–03–2017.)

| | | |
|---|---|---|
| 1. | சமூகப் பணியாளர்<br>(ரூ.8000/– x 12 மாதம்) | ரூ.96,000/– |
| 2. | துணை மருத்துவ செவிலியர்<br>ரூ.5500/– x 12 மாதம் | ரூ.66,000/– |
| 3. | விடுதிக் காப்பாளர்<br>ரூ.4000/– x 12 மாதம் | ரூ.48,000/– |
| 4. | சமையலர்<br>ரூ.3000/– x 12 மாதம் | ரூ.36,000/– |
| 5. | தொழிற் பயிற்சியாளர்<br>ரூ.4000/– x 12 மாதம் | ரூ.48,000/– |
| 6. | உணவூட்டுச் செலவினம்<br>ரூ.400/– x 50 நபர்கள் x 12 மாதம் | ரூ.2,40,000/– |
| 7. | 2 இணை உடைகள்<br>ரூ.500/– x 2 x 50 | ரூ.50,000/– |
| 8. | மருந்துகள்<br>ரூ.250/– x 50 நபர்கள் x 12 மாதம் | ரூ.1,50,000/– |
| 9. | பாய்<br>ரூ.150/– x 50 நபர்கள் | ரூ.7,500/– |
| 10. | தலையணை<br>ரூ.50/– x 50 நபர்கள் | ரூ.2,500/– |
| 11. | சோப்பு, எண்ணெய் மற்றும் இதர செலவினம்<br>ரூ.50/– x 50 நபர்கள் x 12 மாதம் | ரூ.30,000/– |
| 12. | சமையல் எரிவாயு<br>ரூ.900/– x 12 மாதம் | ரூ.10,800/– |
| 13. | படுக்கை விரிப்பு<br>ரூ.200/– x 50 நபர்கள் | ரூ.10,000/– |
| 14. | வாடகை மற்றும் மின்சாரம்<br>ரூ.10,000/– x 12 மாதம் | ரூ.1,20,000/– |
| | **மொத்தம்** | **ரூ.9,14,800/–** |
| | ரூ.9,14,800/– x 31 இல்லத்திற்கான மொத்த செலவினம் | **ரூ.2,83,58,800/–** |

(ரூபாய் இரண்டு கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து எண்ணூறு மட்டும்)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.